
| பொது உபயோகம் (A) | |
|---|---|
| ((4.9+5.2)/2)x((3.9+3.8)/2) | = 19.44ச.மீ |
| | = 19.44/32.70 |
| | = 0.59% |
| **பொது உபயோகம் (B)** | |
| ((5.8+2.3+3.7)/2)x((3.8+2.2)/2) | = 17.7ச.மீ |
| | = 17.7/32.70 |
| | = 0.54% |

| மனைப்பிரிவு சாலைப்பரப்பு | | |
|---|---|---|
| ① (12.8+13.0)/2 x 7.0 | = | 90.30ச.மீ |
| ② (74.0+71.1)/2 x 9.0 | = | 652.95ச.மீ |
| (30.9+35.1)/2 x 9.0 | = | 297.00ச.மீ |
| ③ (41.6+42.4)/2 x 7.2 | = | 302.40ச.மீ |
| ④ (31.5+35.3)/2 x 9.0 | = | 300.60ச.மீ |
| மூலை முடக்கு (1.5x1.5)/2x5 | = | 5.63ச.மீ |
| மொத்த பரப்பு | = | 1648.88ச.மீ |




# மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் (DTCP) சிவகங்கை மாவட்டம்

## நெற்குப்பை பேரூராட்சி

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், நெற்குப்பை பேரூராட்சி, நெற்குப்பை கிராமம், ச.எண்- 344/5-ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம். (திட்டமில்லா பகுதி)

**அளவு : 1:400**

இணையவழி விண்ணப்ப எண் : **AQEHPDYQ ,** நாள். **03.11.2023.**

குறிப்பு :

மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு : 1.215 ஏக்கர் (4919.00ச.மீ)
ஒதுக்கிய மனைகள் : 20+மனுதாரர் உபயோகம்

மனைப்பிரிவின் எல்லை

நிலையிலுள்ள சாலை

வ

பொது ஒதுக்கீடுகள்:

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை:

மனைப்பிரிவின் சாலையின் பரப்பு : **1648.88 ச.மீ**
பூங்கா : (மனைப்பிரிவின் பரப்பு- மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு) **x10%**
: **(4919.00 - 1648.88 = 3270.12) x 10% = 327.01ச.மீ**
பூங்கா பரப்பு : **327.01ச.மீ** (மனுதாரரால் அரசு வழிகாட்டி மதிப்பீடு தொகை செலுத்தப்பட்டுள்ளது)

பொது உபயோகம் (A) : **19.44ச.மீ (0.59%)**

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்திற்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை:

பொது உபயோகம் (B) : **17.70 ச.மீ (0.54%)**

கட்டிட வரம்பு:

9.0மீ வரை அகலம் கொண்ட சாலைகளுக்கு 1.50 மீ விடப்படல் வேண்டும்

9.0மீக்கு மேல் 18.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 3.0 மீ விடப்படல் வேண்டும்

மூலை முடக்கு:

12.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.50மீx1.50மீ விடப்படல் வேண்டும்

12.0மீக்கு மேல் 30.5மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 4.50மீx4.50மீ விடப்படல் வேண்டும்

## நிபந்தனைகள்

1. அரசாணை எண்-18 ந.நி மற்றும் கு.நீ.வ துறை நாள் 04.02.2019 -ன் படி மனைப்பிரிவில் அமையும் சாலைகள் மற்றும் பொது உபயோக ஒதுக்கீடு உள்ளாட்சிக்கு தானமாக பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் (ம) அரசாணை எண்-16 ந.நி மற்றும் கு.நீ.வ நாள் 31.01.2020 ன் படி TANGEDCO ஒதுக்கீட்டினை TANGEDCO (அ) உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட வேண்டும்.
2. அரசாணை எண்-181 வீ.வ (ம) ந.வ.து நாள்: 09.12.2020-ல் தெரிவித்துள்ளவாறு சாலைகள், மழைநீர் வடிகால் வசதி மேல்நிலை நீர்தேக்க தொட்டியுடன் கூடிய குடிநீர் வசதிகள் (ம) தெரு விளக்குகள் ஆகியவை உள்ளாட்சியின் விருப்பத்திற்கு ஏற்ப அமைக்கப்பட்ட பின்னர் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
3. அரசாணை எண்-141 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்.16.07.2022 ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
4. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும்முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்டவருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும், தலைவர், தி.சூரக்குடி ஊராட்சி அவர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
5. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டாலோ மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
6. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வரைபட நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
7. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6'x4' என்ற அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
8. பிரஸ்தாப மனைப்பிரிவிற்கு இவ்வலுவலகத்தால் தொழில் நுட்ப ஒப்புதல் மட்டுமே வழங்கப்படுகிறது. மனுதாரரின் நில உரிமத்தினை உறுதி செய்த பின்னரே உள்ளாட்சியில் இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.
9. பிரஸ்தாப மனைப்பிரிவு அமையும் இடம் குறித்து நீதிமன்ற வழக்கு ஏதும் நிலுவையில் உள்ளது என அறியப்படின் இவ்வுத்தரவு செல்லத்தக்கதல்ல.
10. **மனையிடத்தின் ஊடே செல்லும்** 1மீ அகல நிலையிலுள்ள நிலவியல் வாய்காலானது அதன் போக்கு மாறாமல் நிலைநிறுத்தப்பட்ட வரைபடத்தின் படி நிலைநிறுத்தப்பட வேண்டும். மற்றும் வரைபடத்தில் கண்டுள்ளபடி 1மீ அகலத்திற்கு கட்டிடம் கட்ட தடை செய்யப்பட்ட பகுதி அதன்படியே நிலை நிறுத்தப்படவேண்டும்.

# L.P(SWP)/DTCP/SIVAGANGAI NO: 24/2024

உதவி இயக்குநர் (மு.$.பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
சிவகங்கை மாவட்டம்.

Signature Not Verified